தினகரன்

## வேளாண் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு டி.ஆர்.ஓ அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-04-21 10:14:59

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட குரியனப்பள்ளியில் நடந்த மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 38 பயனாளிகளுக்கு ரூ 24.82 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்.
கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட குரியனப்பள்ளி கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடந்தது. இந்த முகாமிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் பிரகாசம் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் அசோக்குமார், ஒன்றிய குழுத் தலைவர் வழக்கறிஞர் முனியப்பன், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இந்த முகாமில் பல்வேறு கோரிக்கைகளை கொண்ட 220 மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் பெற்றுக்கொண்டு பேசியதாவது: விவசாயிகள் தங்கள் நிலத்தில் உள்ள மண்ணை ஆய்வு செய்து, அதில் எத்தகைய பயிர்களை செய்ய வேண்டும். எந்த உரங்களை பயன்படுத்த வேண்டும் என்பது குறித்த விவரம் அறிய ஒவ்வொருவருக்கும் உழவர் அட்டை வழங்கப்படுகிறது. இதை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை பெருக்கிட முன்வரவேண்டும். கிராம பகுதி மக்கள் பயன்பெற அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்கள் பிரதிநிதிகள் அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக விளங்கி அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சென்றடைய சேவை மனப்பான்மையுடன் தங்களை ஈடுபடுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.
இந்த முகாமின் போது 38 பயனாளிகளுக்கு ரூ 24 லட்சத்து 82 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் சதீஸ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அளேகுந்தாணி கல்யாணி, குரியனப்பள்ளி கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சமூக பாதுகாப்புத் திட்டத்தின் தனித்துணை ஆட்சியர் மஞ்சுளா வரவேற்றார். கிருஷ்ணகிரி வட்டாட்சியர் மணி நன்றி கூறினார்.

## தொண்டாமுத்தூரில் காய்கறி-பழங்கள் இருப்பு வைக்க குளிர்சாதன வசதியுடன் கிடங்கு

பதிவு செய்த நேரம்:2012-04-21 10:08:58

தொண்டாமுத்தூர்: கோவை அருகே தாளியூரில் உழவர் பெருவிழா நடந்தது. பேரூராட்சி தலைவர் புனிதன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ பேசுகையில், 'கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையத்திற்கு அடுத்ததாக தொண்டாமுத்தூர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று விவசாய குளிர் சாதன இருப்பு கிடங்கு விரைவில் கட்டப்பட உள்ளது. இங்கு காய்கறிகள், பழங்களை 10 நாள் வரை இருப்பில் வைத்து விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறலாம்,' என்றார்.

தாளியூரில் உழவர் களம் சீரமைக்கவேண்டும், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தனியார் தலையீடு தடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விழாவில் ஊராட்சி ஒன்றியக் குழு துணை தலைவர் புரட்சிதம்பி, பேரூராட்சி செயல் அலுவலர் ரவி, துணை தலைவர் ரங்கராஜ், மாவட்ட கவுன்சிலர் ராமச்சந்திரன், தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜாமணி, தொண்டாமுத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் ராணி எலிசபெத், உதவி இயக்குநர் பெருமாள்சாமி, முன்னாள் பேரூராட்சி தலைவர்கள் தாளியூர் ரங்கராஜ், பூலுவபட்டி கருப்புசாமி, மாணிக்கம், முத்து, பேச்சாளர் துரைசாமி, தம்பு வேலுச்சாமி, வடிவேலாம்பாளையம் பழனிசாமி மற்றும் வார்டு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ67க்கு விற்றது ரூ39 ஆனது தேங்காய் பருப்பு விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை

பதிவு செய்த நேரம்:2012-04-21 10:06:40

கரூர்: தேங்காய் பருப்பு விலை வீழ்ச்சியடைந்து வருவதால் தென்னை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கரூர் அருகே சாலைப்புதூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்ளது. வேலாயுதம்பாளையம் உழவர்சந்தையில் வியாழன்தோறும் வேளாண் விற்பனைக்குழு மூலம் தேங்காய் பருப்பு ஏலம் நடைபெறுகிறது. இந்த 2 இடங்களுக்கும் தேங்காய் பருப்புகளை விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

நொய்யல் குறுக்குச்சாலை, நத்தமேடு, வேட்டமங்கலம், குந்தாணிபாளையம், புன்னம்சத்திரம், ஓலப்பாளையம், ஒரம்புபாளையம், நல்லிகோயில், கவுண்டன்புதூர், மசக்கவுண்டன்புதூர், கரைப்பாளையம், குப்பம், புன்னம், புஞ்சைபுகளூர், நத்தமேட்டுப்பாளையம், நடையனூர், முத்தனூர், சேமங்கி மரவாபாளையம், குளத்துப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தென்னை அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது.

ஆட்கள் மூலம் தேங்காய்கள் பறிக்கப்பட்டு, அதில் பருப்பு எடுக்கப்பட்டு நன்றாக காய வைத்த

பின்னர் விற்பனைக்கூடங்களுக்கு அனுப்பப்படுகிறது. சாலைப்புதூரில் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏலத்தில் கரூர் மாவட்டம் மட்டுமின்றி திண்டுக்கல், மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் மற்றும் எண்ணெய் நிறுவனங்களின் ஏஜெண்டுகள் வருகின்றனர்.

விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ள தேங்காய் பருப்புகள் சாம்பிள் வைக்கப்பட்டிருக்கும். அதை பார்வையிட்ட பின்னர் ஏலம் எடுப்பவர்கள் ஏலத்தை உறுதிபடுத்துகின்றனர். தரத்திற்கு ஏற்றார் போல விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக தேங்காய் பருப்பு விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத் தில் ஒரு கிலோ தேங்காய் பருப்பு ரூ.45 என ஏலம் போனது. இந்த வாரம் ரூ.39ஆக குறைந்துவிட்டது. கடந்த சில மாதங்களுக்கு முன் விற்பனைக்கூட ஏலத்தில் தேங்காய் பருப்பு கிலோ ரூ.67வரை ஏலம் போனது. கடந்த மாத விலையை ஒப்பிடுகையில் தேங்காய் பருப்பு விலை பாதியாக குறைந்துவிட் டது. மேலும் தொடர்ந்து விலை வீழ்ச்சியடைவதால் தென்னை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பல்வேறு பிரச்னைகளு க்கு இடையே தென்னை சாகுபடி செய்து வளர்த்தும் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை. இளநீருக்கு விற்பனை செய்ய நிலத்தடி நீர் நன்றாக இருக்கவேண் டும். இளநீர் சுவையாக இருந்தால் தான் விற்பனைக்கு இளநீர் பருவத்தில் அனுப்ப இயலும். இந்த பகுதியை பொருத்தவரை பெரும்பாலும் தேங்காய் பருப்பு ஏலத்திற்காக தான் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. விலை வீழ்ச்சியடைந்து வருவது இழப்பை தான் ஏற்படுத்தும் என்கின்றனர் விவசாயிகள்.